இந்தியா-ஈக்வடார் இடையிலான ஆறாவது வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் (நவம்பர் 10, 2026)

இந்தியா-ஈக்வடார் வெளியுறவு அலுவலக ஆலோசனைகளின் (எஃப்ஓசி) ஆறாவது சுற்று, 2026 நவம்பர் 10 அன்று புது தில்லியில் நடைபெற்றது. இந்தியக் குழுவிற்கு வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் (கிழக்கு) திரு. ருத்ரேந்திர டாண்டன் தலைமை தாங்கினார், ஈக்வடார் குழுவிற்கு அந்நாட்டின் வெளியுறவு மற்றும் மனித இடப்பெயர்வுத் துறை துணை அமைச்சர் திரு. அலெஜான்ட்ரோ டாவலோஸ் தலைமை தாங்கினார்.

2. இரு தரப்பினரும் இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ததுடன், பிராந்திய மற்றும் உலகளாவிய நிகழ்வுகள் குறித்து கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

3. ஈக்வடார் நாட்டின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் திரு. டாவலோஸ் அவர்கள் இந்தியாவிற்கு வருகை தந்திருந்தபோது, வர்த்தகத்துறை செயலாளர், சுகாதாரத்துறை செயலாளர் மற்றும் மருந்துகள் துறையின் செயலாளர் ஆகியோருடன் இருதரப்பு ஆலோசனைகளை நடத்தினார். அவர் இந்திய வர்த்தக மன்றங்களையும் சந்தித்தார்.

புது தில்லி

நவம்பர் 10, 2026